1077

1077

விவிலிய நூற்கதைகள்—2

OFFICE OF THE REGISTRAR ...
27 NOV 1934
MADRAS

சங்கீதமணி தாவீதரசன்

திரிசிரபுரம்
பிஷப் ஹீபர் உயர்தரப் பாடசாலை
தலைமை ஆசிரியர்
எஸ். கே. தேவசிகாமணியால்
தொகுக்கப்பட்டது

[விலை அணு 4

1934

O 6 : 4196 w
N34
68128

விவிலிய நூற்கதைகள் —2

OFFICE OF THE REGISTRAR OF ...
27 NOV 1934
MADRAS

சங்கீதமணி தாவீதரசன்

திரிசிரபுரம்
பிஷப் ஹீபர் உயர்தரப் பாடசாலை
தலைமை ஆசிரியர்
எஸ். கே. தேவசிகாமணியால்
தொகுக்கப்பட்டது

பதிப்புரிமை]

[விலை அணு 4

1934

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
27 NOV 1934
MADRAS

முகவுரை

விவிலிய நூலாகிய பைபிளில் பக்தசிரோமணிகள் பலரது வரலாறுகள் மலிந்துள்ளன. அவைகளைப் படிப்பின் நம் நாட்டுச் சிறுவர்களுக்குக் கடவுள் இடத்து அன்பும், அவர் காட்டியருளிய நன்னெறியில் ஒழுகிவர ஊக்கமும் உண்டாகுமெனக் கருதியும், சமரசக் கொள்கை பரவிவரும் இக்காலத்தில் பிற சமயத்தாரும் இந்நூலிலிருந்து சில உண்மைகளைக் கைக்கொள்ளக்கூடும் என்றெண்ணியும் சில பக்தர்களின் சரிதைகளைத் தமிழ் மொழியில் எழுதி வெளியிடத் துணிந்தேன். விஷயத்தை மாணவர்கள் தெரிந்துகொள்வதோடு தமிழ் வசன நடையையும் நன்கு அறிந்துகொள்ளுமாறு கூடியவரை சிறுவர்க்கேற்ற எளிய நடையில் வரைந்துள்ளேன்.

இவ்வரிசையில், 'சங்கீதமணி' எனப் பெயர்பெற்ற தாவீதாசனின் வரலாறு இரண்டாவதாக வெளியிடப்பட்டுள்ளது. இச்சரிதையைப் படிப்போர், கேட்போர், யாவர் மனத்தின்கண்ணும் மட்டற்ற மகிழ்ச்சி பொங்கும் என்பதற்கு ஐயமில்லை. யுத்தப்பயிற்சியற்ற சிறுவனாயிருந்தும், தன் தேசம் இகழப்படுவதையும், கடவுள் நிந்திக்கப்படுவதையும் பொறுக்கவொண்ணுமல் வீராவேசம் பொங்கக், கொடியவனான கோலியாத்தைக் கொன்று, வெற்றியை வெளிப்படுத்திய வீரச் செயலை என்னென்றுரைப்பது? இன்பத்திலும், துன்பத்திலும், பெருமையிலும், சிறுமையிலும் கடவுளைச் சார்ந்து மிக்க பக்தியுடையோனாய் ஒழுகியது தாவீதின் மற்றோர் மாண்பாகும். தமிழ்நாட்டிலுள்ள

தாயுமானவர்போன்ருருடைய பாடல்களைப்போன்றதும், கேட்போர் மனம் உருகத்தக்கதும், இதயத்தை ஈசனிடம் சேர்க்கத்தக்கதுமான சங்கீதப் பாக்களால் பரமனைப் போற்றி, மற்றையோரையும் வழிபடச்செய்த சங்கீதப் புலவனுன தாவீது பெருமானின் கீர்த்தி எந்நாளும் நிலை பெற்றிருக்கும்.

தாவீதைப்போன்ற வீர புருஷர்கள் நமது நாட்டிலும் பெருகவேண்டும். இக்காலத்திய இளஞ் சிறுவர்களே பிற்காலத்தில் தேசப் பணியில் சீர்பெற்று விளங்கவேண்டியவர்களாதலின், சின்னஞ் சிறு பருவத்திலிருந்தே இத்தகைய குணங்கள் அவர்களிடம் சிறந்தோங்குமாறு போதிக்கப்படவேண்டும்.

பெற்ருேரைப் பேணல், நேயரை நேசித்தல், நன்றி மறவாமை, அடைக்கலம் புகுந்தோரை ஆதரித்தல், நெறி தவருது செங்கோல் செலுத்தல், தேசாபிமானம், தெய்வ பக்தி முதலிய அரும் பெருங் குணங்களை, இச்சரிதையைப் படிக்கும் சிறுவர் சிறுமிகள் தம் மனத்தில் கொண்டு, மாண்புடன் ஒழுகுவார்களாக. அவர்கள் உள்ளத்திலும், உரையிலும், செயலிலும் மேற்சொல்லிய சீரிய குணங்கள் செறிந்து விளங்கும்வண்ணம் இன்னருட்கடலாகிய இறைவன் திருவருள் புரிவாளுக.

திரிசிரபுரம், }
12—10—34 }

எஸ். கே. தேவசிகாமணி

சங்கீதமணி தாவீதரசன்

அத்தியாயம் 1

"இறைவர் ஞானமுமேதமிலாமையும்
பொறையும் பூண்ட புதல்வர்ப் பெறுவரேல்
மறவரேனு மவரை யவ்வல்வினை
பிறவி யேழினும் பின்ருெட ராதரோ"

ஆசியாக் கண்டத்தின் மேற்பாகத்தில் மத்தியதரைக் கடற்கரைக்குக் கிழக்கே கானன் என்னும் ஓர் சிறுதேசம் அமைந்துள்ளது. இதற்குத் தென்மேற்கே எகிப்து தேசமும் வடக்கே சிரியா நாடும் உள்ளன. புண்ணிய பூமியாகிய கானன் தேசம் புராதன சரித்திரத்தில் மிக்க மாண்பாய்த் துலங்கியது. புனிதமான யோர்தான் என்னும் புண்ணிய நதி பெருக்கெடுத்து ஓடுதலால் அந்நாடு நீர்வளம் நிலவளம் பொருந்தியதாயிருந்தது. பாலும் தேனும் பாவி ஓடும் தேசம் எனப் புகழ் வாய்ந்ததாய் எத்திசையோரும் வியந்து கூறும் சிறப்பினை உடைய இந்தக் கானன் தேசம் பல்லாண்டுகளுக்கு முன் புகழ்பெற்ற அரசர்களால் அறநெறி வழுவாமல் ஆளப்பட்டு வந்தது.

அந்நாட்டின் தென் பகுதிக்கு யூதேயா தேசம் எனப் பெயர். இதில் சிறுகுன்றின்மேல் நிர்மாணிக்கப் பட்டதும், பெத்லகேம் எனப் பெரியோர்களால் சிறப்பித்துப்பாராட்டப் பட்டதுமான பட்டணம் ஒன்று உண்டு. ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஈசாய் என்னும் பெயர்புனைந்த தனவந்தன் பெருங்குடும்பத்தினனாய் இருந்தபோதும், இல்லற நெறி தவருது கடவுள் பக்தியுடையோனாய் இல்வாழ்க்கை நடத்தி வந்தான். அன்னை

தயையும், அடியாள் பணியும், பொன்னின் அழகும், புவியின் பொறையும், ஒருங்கே அமைந்துள்ள மாது அவனுக்கு மனைவியாக வாய்க்கப் பெற்றிருந்தாள். இல்லறத்தை அடைந்தவர்களுக்குப் புத்திரப்பேறே சிறந்த ஆபரணமாகும். அதற்கு இசைவாய் ஈசாய்க்கு அவன் மனைவி எட்டு ஆண் மக்களையும் இரண்டு பெண்மக்களையும் பெற்றெடுத்தனள். ஆண்மக்கள் தேகவலிமை மனோபலம் அமைந்து சகல நற்குண நற்செயல்கள் வாய்ந்தவர்களாய்த் தாய் தந்தையருக்கு அணிகலமாக நன்னெறியைக் கடைப் பிடித்து ஒழுகிவந்தனர்.

அவ்வாறான எட்டுப் புதல்வர்களில் கனிஷ்ட புத்திரன் பெயர் தாவீது. அவன் சிவந்த மேனியும், அழகிய கண்களும், கம்பீரத் தோற்றமும், அடையப் பெற்றிருந்தான். தேக ஆற்றலும் மனோதிடமும் உடையவன். இளைஞனாயிருக்கையில் தனது தந்தையின் ஆடுகளைக் காட்டிற்கு ஓட்டி மேய்த்துக்கொண்டு வந்தான். மலைச்சார்பான குன்றுகளுக்கு இடையில் ஆடுகளைத் தப்பிப் போகாமல் இராப்பகலாய்ப் பாதுகாப்பது கடினமான தொழில். சிங்கமும் கரடியும் அப்பாகங்களில் வாழ்ந்து வந்தமையால் அடிக்கடி காட்டு மிருகங்கள் ஆட்டுக் குட்டிகளைத் தூக்கிக் கொண்டு போவது சகஜம். ஓர் இரவு கரடி ஒன்று வந்து ஆட்டில் ஒன்றைப் பிடித்துக்கொண்டு ஓடிற்று. அப்போது மிக்க வலிமை வாய்ந்த தாவீது பின் தொடர்ந்துபோய்க் கரடியைக் கொன்று ஆட்டைக் காப்பாற்றிக் கொண்டுவந்தான். மற்றொரு முறை சிங்கம் ஒன்று வந்து குட்டியைக் கொண்டு ஓடினபோது தாவீது பின்பற்றிச் சென்று சிங்கத்தைத் தடியால் தாக்கினன். அது குட்டியை விட்டு இவன் மேல் பாய்ந்தது. தைரியத்தைக் கைவிடாமல் அதன் தாடியைப் பிடித்து அதை அடித்து உயிரை மாய்த்

துவிட்டான். ஆடுகள் மேய்ந்துகொண்டிருக்கும்போது காலத்தை வீணாய்க் கழிக்காமல் தாவீது சங்கீதவாத்தியம் ஒன்றைச் செய்து அதில் பழகி வந்தான். கொஞ்சக்காலம் கழிந்தபின் சுரமண்டல வாத்தியம் வாசிப்பதில் மிக்க தேர்ச்சி பெற்றவனானான்.

அக்காலத்தில் அன்னாள் என்னும் மாது அருந்தவப் பயனாகப் பெற்றெடுத்த சாமுவேல் என்னும் முனிவன் பெரும்புகழ்பெற்றுப் பகவான் சித்தத்தைப் பகுத்தறிந்து கொள்ளும் பாக்கியம் அடைந்தவனாய் இஸ்ரவேல் ஜனம் அனைத்துக்கும் நீதிபதியாய் இருந்து அவர்களுடைய வழக்குகளை விசாரித்து நியாயம் வழங்கி வந்தான். அவனது தீர்மானத்தால் சவுல் என்னும் ஆண்மையாளன் இஸ்ரவேலுக்கு அரசனாக நியமிக்கப்பட்டு அரசு புரிந்து வந்தான்.

சாமுவேல் முனிவனது ஆலோசனையைக்கேட்டுவந்த காலம் எல்லாம் அரசாங்கம் புகழ்பெற்றோங்கினது. சில ஆண்டுகளுக்குப்பின் சவுல் அரசன் கர்வங்கொண்டு சாமுவேலின் யோசனைக்கு முரணாக நடந்ததால் கடவுளின் அனுக்கிரகத்தை இழந்தனன். பெலிஸ்தர் என்னும் அயல் நாட்டாரோடு அடிக்கடி போர்புரிய நேரிட்டது. அபஜெயமும் பொருள் நஷ்டமும் சாதாரணமாய் விட்டன. அமலேக்கியர் என்னும் பொல்லாத மக்களை நிர்மூலமாக்கும்படி எகோவா தெய்வம் ஆஞ்ஞாபிக்க, சவுல் அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் தெய்வ கோபத்துக்காளானான். தன் ஆலோசனைக்கிணங்க நடவாது சுய'ச் சித்தத்தின்படி நடந்ததால் சாமுவேல் முனிவன் சவுலின்மேல் சீற்றங்கொண்டு "இவன் அரசாங்கத்தை நடத்தற்குத் தகுதியற்றவன். இவனது செங்கோல் கொடுங்கோலாகி விடும். இவனுடைய ஆயுளுக்குப்பிறகு தக்க புருஷனை வேறு கோத்திரத்தினின்று தேர்ந்தெடுத்தல் அவசியம்" என மனதில் நிர்ணயித்தான்.

இந்த எண்ணத்துடன் கடவுளைப் பூஜித்து அவர் சித்தம் அறியுமாறு வேண்டினன். இறைவன் அம்முனிவனது கனவில் தோன்றி "நீ தெற்குத் திசையிலுள்ள பெத்லகேமுக்குப்போ. அங்குள்ள ஈசாய் மரபில் உதித்த மக்களுள் ஒருவனைத் தெரிந்துகொண்டேன். தைலம் எடுத்து உடனே சென்று அவனுக்கு அபிஷேகம் பண்ணிவா" எனப்பணித்தருளினர். ஈசனின் திருவுள்ளத்திற்கிணங்க சாமுவேல் முனிவன் தாமதமின்றிப் பெத்லகேமுக்கு நேராக ஏகினன். சில ஆண்டுகளாக அந்தப் பக்கத்துக்கு நியாயம் விசாரிக்கச் சாமுவேல் போகாதிருந்தமையால் பட்டணத்திலுள்ள முதியோர் யாவரும் அவனைக்கண்டதும் மனம் தத்தளித்து அவனிடம் கும்பலாய்வந்து யாது விசேஷம்? எல்லாம் சமாதானந்தானு? என்று வினவினர்கள். அவன், எல்லாம் நல்ல விஷயந்தான். பகவானைப் பூஜிக்கவே வந்தேன். நீங்கள் உங்கள் குடும்பத்தைப் பகவத் சேவைக்கும், ஈஸ்வர வழிபாட்டுக்கும் வேண்டிய ஆயத்தம்செய்வது அவசியம் என்று சொல்லி அவர்களைப் பூஜைக்கு வரவழைத்தான்.

பின்பு ஈசாயை நோக்கி பகவத் சேவையை ஆரம்பிக்குமுன் உன் ஆண்மக்கள் யாவரையும் பார்க்க மிக்க ஆர்வமுள்ளவனுயிருக்கின்றேன். அவர்கள் தனித்தனியாக என் முன்வந்து கடந்து போகட்டும் என்று கேட்டுக்கொண்டான். அவ்வாறே எலியாப் முதல் அபினதாப், சம்மா முதலிய ஏழு குமாரர்களும் சாமுவேலுக்கு முன்னுக நடந்துபோனர்கள். அவர்களில் ஒருவராவது முனிவனுடைய மனத்துக்கு இசைந்தவராகத் தோன்றவில்லை. இந்த ஏழு பேர்களில் அரச பதவிக்கேற்ற குணம், தகுதி யாருக்காவது இருந்ததாகச் சாமுவேல் ஞானி உணரவில்லை. பிறகு அம்முனிவன் சற்றுத் திகைத்து ஈசா

யைப் பார்த்து "உன் மக்கள் எல்லாம் இவ்வளவு தானு? இன்னும் யாராவது இருக்கிருர்களா?" என்று வினவினுன். ஈசாய் "இன்னும் கனிஷ்ட புத்திரன் ஒருவன் உண்டு. அவன் காட்டில் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிருன். அவனுக்குப் பதினைந்து வயது இன்னும் முடியவில்லை. ஆனுல் கவி பாடுவதில் வல்லவன்; கின்னரம் வினையாடுவதில் கைதேர்ந்தவன்; கவண்கல் எறிவதில் மிக்க சமர்த்தன்," என மறுமொழி பகர்ந்தான். அப்போது சாமுவேல் முனி ஈசாயை மீண்டும் நோக்கி "உடனே தூதுவனை அனுப்பி அவனை வரவழைக்கவேண்டும். அவன் வந்து சேரும்வரையில் பந்தியில் அமரமாட்டேன்" என்று கூறினுன்.

அப்படியே ஈசாய் ஆள் அனுப்பி வரவழைக்க, இளைஞுை தாவீதும் பெரியோன் முன் வந்து நின்றுன். ஒப்பற்ற அழகும், உயர்வுற்ற விவேகமும், களங்கமற்ற நெஞ்சமும், கம்பீரத் தோற்றமும் பொருந்தினவனுகச் சாமுவேலுக்குத் தோன்றினமையால் இவனே கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவன் என மனந்தெளிந்து அபிஷேகத்தைலம் அடங்கிய கொம்பைக்கரத்தில் எடுத்து அவனது தாய் தந்தையர், சகோதரர், சகோதரிகள் முன் பாகத் தாவீதுக்கு அபிஷேகம் செய்தான். பின் பூஜையை முடித்துக் கடவுள் சித்தம் கைகூடியதெனத் திருப்தியுற்றுச் சாமுவேல் பக்தன் தனது ஊராகிய ராமாவுக்குப் புறப்பட்டுப் போயினுன். தாவீதுக்கு அந்த அபிஷேகத்தின் அர்த்தம் புலப்பட்டதோ, என்னவோ? அவன் குடும்பத்தாருக்குக் கூட அந்தச் சடங்கின் கருத்துத் தெரிந்ததோ, என்னவோ? தாவீது மீண்டும் தன் சொந்தத் தொழிலாகிய ஆடு மேய்ப்பதில் ஆழ்ந்தவனுய்க் காட்டில் அலைந்து கபடற்ற ஜீவியம் செய்து வந்தான்.

அத்தியாயம் 2.

"ஓடுங் கொடியவிடப்பாம்பும்பேயு மிசைகேட் டுள்ளுருகி
யாடுங் கருங்கல் அசைந்துவரும் அழுதகுழவி குரலடங்கும்
மாடு மிசைகேட் டழுதுவரும் வந்தபசுவும் பால்சுரக்கும்
பாடு மிசைகேட் டுருகாரை என்னென்றுரைப்பேன் பாவலரே."

சாமுவேல் ஞானியின் மொழியை உட்கொள்ளாதவனுப்ச் சவுல் தான் நினைத்த பிரகாரம் அரசாங்கத்தை நடத்தத் தலைப்பட்டது முதல் அவனுக்கு அல்லல் ஏற்பட்டதேயொழிய இன்பமில்லை. எத்தகைய வேலையை ஆரம்பித்தாலும் துக்கமும் வெட்கமும் நேர்ந்தன. போரில் புகுந்தால் அபஜெயமும் அபகீர்த்தியுமே உண்டாயின. கடவுளின் அருள் அவனைவிட்டு நீங்க, ஓர் பொல்லாத ஆவி அவனைக் கலங்கப்பண்ணிக் கொண்டிருந்தது. வேளா வேளைகளில் சோம்பலும் சோகமும் ஏற்பட்டவனுயிருந்தும் சமயாசமயங்களில் பெருங்கோபத்துக்காளாகிப் பணியாளரைத் துன்புறுத்துவதுண்டு. இதைக் கண்ணுற்ற கீழ் அதிகாரிகள் சவுலைப் பார்த்து, "பகவானால் அனுப்பப்பட்ட ஓர் கெட்ட ஆவி உம்மைத் துன்புறுத்துகின்றது. அதை ஒட்டி உம்மை மகிழ்வுறச் செய்ய ஓர் உபாயம் யோசித்திருக்கின்றோம். பொல்லாத ஆவி உம்மேல் இறங்குகையில் சங்கீதத்தில் தேர்ந்த ஒருவன் சுரமண்டல வாத்தியம் வாசித்தால் உமக்கு ஆறுதல் உண்டாகிச் சுகம் அடையக்கூடும். ஆண்டவராகிய தாங்கள் கட்டளை இடுவீராகில் வாத்தியம் வாசிக்கத்தக்க வாலிபனை அழைத்துக் கொண்டு வரத் தயாராய் இருக்கின்றோம்" என்றார்கள்.

சவுலும் அவர்களுடைய ஆலோசனைக் கிணங்கி அவ்வித சங்கீத வித்வானைத் தன்னிடம் அழைத்துக்கொண்டு வரச் சம்மதித்தான். ஊழியர் பற்பல இடங்களுக்குச்

சென்று தகுந்த சங்கீதக்காரனைத் தேடலாயினர். அதை அறிந்த சாமுவேல் முனிவன் அவர்களைப்பார்த்து "ஈசாய் இருக்கும் பெத்லகேமுக்குப் போவீர்களாயின் நிறைந்த அழகும், சிறந்த தைரியமும், தக்க சங்கீதத் தேர்ச்சியும் செறிந்து விளங்கும் ஒருவனைக் காண்பீர்கள்" எனக்குறிப்பிட்டுச் சொன்னன்.

அக்குறிப்புக்களைக் கேட்ட ஊழியர்கள் பெத்லகேமுக்குப் போய்த் தாவீது என்னும் சங்கீத வாலிபனைக் கண்டுமகிழ்ந்தார்கள். அரசனது கட்டளையைக் காட்டி அந்தக்கணமே ராஜ சமூகத்திற்கு வரவேண்டுமென அழைத்தார்கள்.

தாவீதை அரச சமூகத்துக்கு அழைத்துச் செல்ல அரண்மனைப் பணியாளர் வந்தனர் என்னும் செய்தி ஊரில் பரவிற்று. அப்பொழுது அங்குண்டான கிளர்ச்சி எப்படியிருக்கும் என்று யாவரும் ஊகித்துக்கொள்ளலாம். தந்தை ஈசாயிக்கிருந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. தாவீதுக்கு ஏற்பட்ட உயர்ந்த பதவியினுல் உறவினர் யாவரும் உற்சாகம் அடைந்தார்கள். தெய்வ சந்நிதானத்திற்கும், ராஜ சமூகத்திற்கும், ஆசிரியர், பாலர், கர்ப்பப் பெண்கள் முதலியவர்கள் உள்ள இடத்திற்கும் வெறுங்கையுடன் ஏகலாகாது என்ற சத்தியமறையை உணர்ந்த ஈசாய், கூடை நிறைய அப்பத்தையும், துருத்தி நிரம்பத் திராட்சை ரசத்தையும், ஒரு வெள்ளாட்டுக் குட்டியையும் கழுதை மீது ஏற்றித் தன் புதல்வனுகிய தாவீதின் மூலமாய்ச் சவுல் அரசனுக்கனுப்பினுன். இவ்வித வழக்கம் பெர்சியாவிலும் இந்தியா தேசத்திலும் தற்போதும் உண்டு. ஒரு பெரியாரைப் பார்க்கப்போனுல் கையுறை ஒன்றுமின்றி எவ்வாறு செல்வதென்று யோசிப்பார்கள். கனியோ, மலரோ, காயோ, கற்கண்டோ ஏதாவது ஒரு பொருளைக்

கையுறையாகக் கொண்டுபோவது தொன்றுதொட்டுள்ள வழக்கம்.

கண்டோர் யாவரும் தாவீதை நேசிக்காமல் இருக்க மாட்டார்கள். அவ்வாறே தாவீதின் செந்தாமரை மலரைப் பழிக்கும் சிவந்த மேனியும், வியக்கத்தக்க பக்தி விநயமும், சவுலின் இதயத்தைக் கொள்ளைகொண்டன. தாவீதை உண்மையாக நேசித்ததுமல்லாமல் அவனைத் தனக்கு ஆயுததாரியுமாக்கிவிட்டான். அதுவுமன்றி தாவீதை அரசாங்க உத்தியோகஸ்தர்களில் ஒருவனாகவும் நியமித்து அவன் தன் அரண்மனையில் சதாகாலமும் தங்கியிருக்கட்டும் என்று சவுல் ஈசாய்க்குச் செய்தி சொல்லி அனுப்பினான். ஈசாயின் உவகைக்கு ஓர் எல்லை உண்டோ? சவுலின்மேல் பொல்லாத ஆவி இறங்கி வெகுவாய் இன்னல்படுத்தும்போதெல்லாம் தாவீது சுரமண்டல வாத்தியத்தை எடுத்து வாசிப்பான். உடனே சவுல் மிக்க ஆறுதல் அடைந்து சாந்தகுணம்பெற்றுச் சொஸ்தமாவான்.

அத்தியாயம் 3

"சத்தியத்தை வெல்லாத சத்தியந்தா னீள்பொறையை
மெத்தியே கோபமது வெல்லாது—பத்திமிகு
புண்ணியத்தைப் பாவமது வெல்லாது போரரக்கர்
கண்ணனைத்தான் வெல்லுவரோ காண்."

தொன்றுதொட்டு இஸ்ரவேலருக்கும் அயல்நாட்டு ஜாதியாராகிய பெலிஸ்தருக்கும் ஓயாத போர் நிகழ்ந்துவந்தது. இருவகுப்பாரும் பெரும் பகையாளர்கள். யுத்தத்தில் பெலிஸ்தரை மேற்கொள்ளும்படியாகப் போரில் சிறந்த போர்வீரரைச் சேர்த்துப் படை அமைப்பதில் சவுல் தன் காலத்தைக் கழித்தான். இத்தகைய தொழிலின்மீது கண்

ணும் கருத்துமாயிருந்தபடியால் தாவீதின் சங்கீத சேவை அவசியமில்லாதிருந்தது. அந்தக் காலம் தாவீது விடை பெற்றுத் தன் கிராமத்திற்குச் சென்று ஆடு மேய்க்கும் தொழிலை மீண்டும் நடத்திவந்தான். தாவீதின் மூத்த சகோதரரில் மூவர் சவுலின் ராணுவத்தில் சேர்ந்துவிட்டமையால் வயோதிகத் தந்தையான ஈசாய்க்கு உதவியாயிருக்கத் தாவீது சவுலை நீங்கித் தந்தையை அடைவது மிக்க அவசியமாயுமிருந்தது.

பெலிஸ்தர் அணிவகுத்துப் போர்புரிய வந்தார்கள் என்று கேள்விப்பட்டதும் சவுல் தனது சேனையைத் திரட்டிப் பெலிஸ்தர் பாளயம் இறங்கியிருந்த மலைச் சாரலுக்கெதிரில் மற்றோர் மலைச்சாரலில் பாளயம் இறங்கினான். இருவருக்கும் நடுவே பள்ளத்தாக்கு ஒன்று இருந்தது. பெலிஸ்தருக்குள் ஓர் சிறந்த போர்வீரன் இருந்தான். அவன் பெயர் கோலியாத் என்பது. அவன் பத்தடி உயரமுள்ளவன், அதாவது ஆறு முழமும் ஒரு ஜாணும் உயரமானவன். அவன் வெண்கலச் சீராவையும் வெண்கலக் கவசத்தையும் அணிந்திருந்தான். அவனுடைய ஈட்டியின் கைத்தாங்கு நெசவுக்காரரின் படை மரத்தின் கனதியையும், ஈட்டியின் அலகு அறுநூறு சேக்கல் இரும்பையும் கொண்டிருந்தது. பரிசை பிடிக்கிறவன் ஒருவன் அவனுக்கு முன்னாக நடந்து சென்றான். பிரதிதினமும் காலையிலும் மாலையிலும் இஸ்ரவேலருக்கு முன்பாகப் பள்ளத்தாக்கில் நின்று சத்தமிட்டு "நீங்கள் யுத்தத்திற்கு அணிவகுத்து வாழ்நாளை வீணாக்கி வாடி நிற்பானேன். உங்களில் சிறந்த வீரன் ஒருவனைத் தெரிந்துகொள்வீர். என்னிடத்தில் அமர்புரிந்து அவன் என்னை வெல்லுவானாகில் நாங்கள் உங்களுக்கு அடிமைகள் ஆவோம். அப்படி அல்லாமல் உங்கள் வீரனை நான் வெல்லுவேன் ஆனால், நீங்கள்

எங்களுக்குப் பணியாட்களாயிருந்து சேவிப்பது உங்கள் கடமையாகும்" என்று விருதுகூறி வீரம் பேசி நின்றான்.

இவ்வித வீம்புப் பேச்சைக் கேள்வியுற்ற இஸ்ரவேலர் ஒருபக்கம் வெட்கமும், மற்றொருபக்கம் வீராவேசமும் அடைந்தார்கள். எனினும் கோலியாத்தை எதிர்க்கத்தக்க தைரிய புருஷன் சவுலின் படையிலிருந்து முன்வரக் காணவில்லை. நாற்பது நாட்கள் சென்றன. கோலியாத்தைக் கொல்லுவோனுக்குச் சவுல் தன் குமாரத்தியை மனைவியாகக் கொடுப்பதாகவும், சிறந்த சீமானுக்கிவிடுவதாகவும் வாக்களித்திருந்தான். அப்படி இருந்தும் வம்பனைக் கொல்ல எவரும் முன் வந்தாரில்லை.

நாற்பது தினங்களுக்கு மேலாகியும் போர் முனையினின்று செய்தி ஒன்றும் வராததால் ஈசாய் சற்றுக் கலங்கி தன் இளைய குமாரனான தாவீதைப்பார்த்து "அப்பா உன் அண்ணன்மார் மூவர் போர்க்களம் போயினர். நாற்பது நாட்கள் ஆகியும் நலம்புலன் தெரியாது கலக்கமுற்றேன். அவர்களுடைய சுகச் செய்தி தெரிந்துவந்தால் நலமாகும். கொஞ்சம் வறுத்த பயற்றையும், பத்து அப்பங்களையும் எடுத்துக்கொண்டு பாளையத்தில் இருக்கும் உன் சகோதரர் இடம் ஓடிப்போய்ச் சுகச்செய்தியை உசாவி அவர்களிடத்திலிருந்து ஓர் அடையாளம் வாங்கிக் கொண்டுவா" என்று கட்டளையிட்டான். தாவீதுக்கு அப்போது வயது இருபத்துமூன்று. நல்ல வாலிபன். யுத்தத்தைக் கண்டு மகிழப் பேரவாக்கொண்டவன். சற்று வேலையிலிருந்து நீங்கிச் சிறு விடுமுறை கிடைத்ததே பெரும் பாக்கியம் என்று எண்ணினான். ஆட்டு மந்தையைக் காவல்காரன் வசம் ஒப்புவித்துக் காலையில் எழுந்து இஸ்ரவேலரின் பாளையத்துக்கு வந்து சேர்ந்தான். இரண்டு படைகளும் பள்ளத்தாக்கின் இப்புறமும் அப்புறமும் அணி

வருத்து நிற்பதைக் கண்ணுற்ருன். வழக்கப்போல் கோலியாத் என்னும் பெலிஸ்தன் நிந்தனையாக உரத்த குரலுடன் சொன்ன சபதச் சொற்களைக் கேள்வியுற்ருன். இஸ்ரவேலர் அனைவரும் அந்தப் பெலிஸ்தியனைக் கண்டதும் மிகவும் அஞ்சி அப்பால் விலகி ஓடிப்போவதையும் பார்த்தான். தாவீதுக்கு உடனே வீராவேசம் எழுந்தது. அப்போது ஜீவனுள்ள தெய்வத்தின் சேனைகளை நிந்திக்கும் இந்தப் பெலிஸ்தியன் யாவன்? இவனைச் சம்ஹாரம் செய்பவனுக்கு என்ன கிடைக்கும்? எனக் கேட்டு அறிந்துகொண்டு, தான் பெலிஸ்தியனேடு பொருது அவனை மாய்த்து விடுவதாக வாய்விட்டு அரற்றினன்.

கீழ்க்கண்ட செய்யுளில் விளங்கிய பிரகாரம் தாவீது உற்சாகத்துடன் வீரங்காட்ட முன் வந்தான்:—

"உலகினில் வாழும் ஒவ்வொருவர்க்கும்
இன்ருே பின்ருே எய்திடுஞ்சாவு;
இங்ஙனம் இருக்க எங்ஙனம் ஒருவன்
தன்குல முன்னவர் மன்புகழ் காக்கவும்
தான்பணி கடவுளர் தளிகளைக் காக்கவும்
பெரும்படையென்று பேதியா நெஞ்சொடு
விரும்பிப் பகைவரை வேல்கொடுதாக்கித்
துரும்பென உயிரை இகழ்ந்து துறத்தலின்
அரும்புகழ்ச் சாவினை அடைதலாகும்மே"

தாவீதின் வீரமொழிகளைக் கேட்ட அஞ்சற்காரர் அரசனிடம் சென்று அறிவித்தனர். அவனும் இத்தகைய அஞ்சா நெஞ்சமுள்ள வீரன் தன் ராச்சியத்தில் இருக்கிருஞ என மகிழ்ந்து தன் சமுகத்துக்குத் தாவீதை வரும்படி கட்டளையிட்டான். தாவீது சவுலை நோக்கி "தாங்கள் இருதயம் கலங்கவேண்டாம். உடல்வலியும் திமிரும் ஒருங்கேயுள்ள கோலியாத்தை நான் எதிர்த்து அவன் கதியை

அதோகதியாக்குவேன். எகோவாவே என் துணை" என்று தைரியமாகச் சொன்னான்.

"நீயோ இளைஞன். அவனோ இளமைப்பருவந் தொட்டுச் சிறந்த வீரனாய்த் திகழ்ந்தோங்கியவன். அவனை நீ எதிர்த்து நிற்பின் என்னவாகும்?" என அரசன் தடுக்க முயன்றான். அப்போது தாவீது "வீரம் என்பது அஞ்சாமை எனப்பொருள்படும். சாவோ ஆறிலுமுண்டு, நூறிலுமுண்டு. 'நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு' என்னும் முது மொழியை நன்கு ஆராய்ந்தவர் வீரம் விளைவிக்கப்பின் வாங்கார். எனது தந்தையின் ஆடுகளை மேய்த்துக்கொண் டிருக்கையில் ஓர் இரவில் ஒரு கரடியும் இன்னொரு இரவில் ஒரு சிங்கமும் வந்து ஆட்டுக்குட்டிகளைத் திருடிப்போன போது பின் தொடர்ந்து கரடியையும் சிங்கத்தையும் அடித்துக்கொன்று குட்டிகளைத் தப்புவித்த எனக்கு இந்த விருத்தசேதனமற்ற பெலிஸ்தன் எம்மாத்திரம்? ஜீவ னுள்ள எகோவாவின் சேனைகளை நிந்தித்த பாதகனை உயிர் துறக்காமல் விடுவது மகாதோஷம் அல்லவா? கரடியை யும் சிங்கத்தையும் மேற்கொள்ள வன்மைதந்த கடவுள் இந்தப் பெலிஸ்தனை மாய்க்க வலிமை கொடாரோ" என மிகவும் தீரமாய்ப்பதில் உரைத்தான். அரசன் தாவீதின் வீரத்தை மிகுதியாய்ப் பாராட்டி "ஈஸ்வரன் அருள் உன்னோடிருப்பதாக" என ஆசிமொழி கூறிப் பெலிஸ்த னுடன் அமர் புரிய அனுப்பினான்.

தலைச்சீரா, உடல் கவசம், பட்டயம் முதலிய கனத்த ஆயுதங்களை அணிந்து அமர்க்களம் போக எத்தனித்துப் பயன்படாததால் அவைகளைக்களைந்துவிட்டு வழக்கம் போலத் தடியை ஒரு கையில் தாங்கி, அருகில் ஓடின சிற் றூற்றில் ஐந்து கூழாங்கற்களைப் பொறுக்கி எடுத்துத்

தனது அடைப்பத்தில் போட்டுத் தன் கவணை மற்றொரு கையிலே பிடித்துக்கொண்டு பெலிஸ்தனை நோக்கிச்சென்ருன். கோலியாத் என்னும் பெலிஸ்திய வீரன் தன்னுடன் தனி யுத்தம் செய்யப் புகும் எதிர்ப்படை வீரன் எத்தகையாளனே எனப் பார்க்க மிக்க அவாவுடன் பாளையத்தை விட்டுப் பள்ளத்தாக்குக்கு வந்தான். தாவீதைக்கண்டு அவன் சவுந்தரிய புருஷனும், சிவந்த மேனி யுள்ளவனுமாயிருந்தபடியால் அவனை முதலில் அசட்டை செய்தான். தன்னைப் பரிஹாசம் செய்ய ஆயுதம் தரியாத ஓர் சிறுவனைச் சவுலரசன் அனுப்பியிருக்கக் கூடும் என்று உன்னி மிகுந்த கோபங்கொண்டான். தாவீதைப்பார்த்து "நீ தடியுடன் என்னிடம் வரக்காரணம் என்ன? நான் உன் வீட்டில் திருடவந்த நாயா? இதோ பார், நான் உன் மாமிசத்தை ஆகாயத்துப் பறவைகளுக்கும், காட்டு விலங்குகளுக்கும் உணவாகக் கொடுப்பேன்" என்று சபதங் கூறினன். தாவீது பெலிஸ்தனை நோக்கி "நீ பட்டயத்தோடும் ஈட்டியோடும், கேடயத்தோடும் என்னிடம் வந்தாய். நானே அவ்வித ஆயுதங்களை லட்சியப்படுத்தாது நீ அவமதிப்புடன் நிந்தித்த நிர்மலக் கடவுளை நம்பிப் பரிபூரண ஆனந்த சொரூபனுகிய இறைவனுடைய துணைகொண்டு உன்னுடன் போர்புரிய வந்தேன். நிச்சயம் உன் உயிரை இன்று மாய்த்துவிடுவேன். உன் தலையை வாங்கி, உன் உடலையும், உன் பின் நிற்கும் வீரரின் பிணங்களையும் ஆகாயப் பறவைகளுக்கும், காட்டு மிருகங்களுக்கும் விருந்தாகக் கொடுப்பேன். இவ்வித வெற்றியிலிருந்து கடவுள் ஒருவர் உண்டென்றும் அவர் இஸ்ரவேலரோடிருக்கிருர் என்றும் புவி எங்கும் பறை சாற்றப்படும். எவ்வுயிர்க்கும் தனிப்பெருந் தலைவனுக விளங்கும் இறைவனுடைய அருள் பெற்றோர்க்குப் பட்டயமோ, ஈட்டியோ, வேறு ஆயுதமோ

வேண்டுவதில்லை. அவர் சித்தப்படி யுத்தத்தை நடத்து வார். அவரை அண்டினோர்க்கு அருட் பெருஞ்சோதியார் அடைக்கலங் கொடுத்துத் தடையின்றி ரட்சிப்பது உண்மை. இத்தகைய சத்தியத்தை உன் உயிர் பிரியுமுன் நீ உணர்ந்து கொள்வாயாக'' என்று யாவரும் கேட்கும் வண்ணம் எடுத்து இயம்பினன்.

இவற்றைக் கேட்டதும் பெலிஸ்தன் மிகவும் வெகுண்டு தாவீதுக்கு எதிராகக்கிட்டி வரும்போது, தாவீது கோலியாத்துக்கு எதிராக ஓடித் தன் கையை அடைப்பத்திலே போட்டு ஒரு கூழாங்கல்லை எடுத்துக் கவணில் வைத்துச் சுழற்றி முழுப் பலத்துடன் பெலிஸ்த னின் நெற்றியில் படும்படி எறிந்தான். தாவீது வைத்த குறிப்பின்படி அந்தக் கல் அவன் நெற்றியில் பலமாய்த் தாக் கிப் பதிந்துவிட்டது. பெலிஸ்தன் வேரற்ற விருட்சம் போல முகம் குப்புறத் தரையிலே விழுந்தான். ஒரு நிமிஷங்கூடக் காலதாமதம் செய்யாமல், தாவீது தீரன் பெலிஸ்தனிடம் ஓடி அவன் மேல் காலை வைத்து மிதித் தான். தனக்குப் பட்டயமில்லாததால் பெலிஸ்தனின் பட்டயத்தை உருவி அவன் தலையை வாங்கினன். மீண்டும் அவன் தலையைக் கையில் எடுத்து யாவரும் பார்க்கத் தக்கதாக உயர்த்திக் காண்பித்தான். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'' என்னும சத்தியமறை பொய்யாகுமோ?

தங்கள் வீரன் மாண்டான் எனக்கண்டதும் பெலிஸ் தர் யாவரும் வெருண்டு ஓடிப்போனார்கள். 'ஓடுகிறவனைக் கண்டால் துரத்துகிறவனுக்குத் தொக்கு' என்னும் பழ மொழிப் பிரகாரம் இஸ்ரவேலரின் சேனை மிக்க ஆரவாரத் துடன் கிளம்பி பெலிஸ்தரை அவர்களுடைய முக்கிய பட்டணம் ஆகிய எக்ரோனின் வாசல்மட்டும் துரத்தியது. ஆயிரக்கணக்கான பெலிஸ்தர் வெட்டுண்டு விழுந்தார்

கள். பின்னும் இஸ்ரவேலர் திரும்பிவந்து பெலிஸ்தரின் பாளையத்தைக் கொள்ளையிட்டார்கள். வீரனான தாவீதோ பெலிஸ்தனுடைய தலையைக் கிபியாவுக்குக் கொண்டுவந்தான். அவனுடைய ஆயுதங்களைத் தன் கூடாரத்திலேயே வைத்துவிட்டு வந்தான்.

அத்தியாயம் 4

"அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்."

யுத்தம் முடிந்ததும் சவுல் அரசன் தாவீதை மீண்டும் தன் ஊருக்குப் போகவிடாமல் தனது அரண்மனையிலேயே தங்கியிருக்கக் கட்டளையிட்டான். சில நாட்களுக்குப் பின் அவனை உயர்ந்த உத்தியோகஸ்தரில் ஒருவனாகவும், தனக்கு உதவியான அமைச்சனாகவும் ஏற்படுத்திக்கொண்டான். எந்த விஷயத்திலும் தாவீது புத்திமானாகவும், காரியத்தில் சமர்த்தனாகவும் நடந்துகொண்டான். கடவுளின் அருள் அவனுக்கு மிகுதியாயிருந்தமையால் அவன் யாவராலும் புகழப்பட்டு வந்தான். சவுலுக்கு யோனத்தான் என்று ஒரு குமாரன் இருந்தான். அவனுக்கும் தாவீதுக்கும் மிகுந்த சிநேகம் ஏற்பட்டது. உயிருள்ளவரையிலும் தாங்கள் பிராண சிநேகிதராய் இருப்பதாக உடன்படிக்கை செய்து கொண்டார்கள். யோனத்தான் நட்புக்கு அடையாளமாகத் தன் அங்கியையும், போர்க் கவசத்தையும், பட்டயத்தையும், வில்லையும், கச்சையையும் தாவீதுக்குக்கொடுத்து ராஜ சமூகத்தில் நிற்பதற்கு ஏற்றவனாக்கினான். இருவருடைய மனமும் எல்லா விஷயங்களிலும் ஒருமையுற்றிருந்தது.

பெலிஸ்தரை அடக்கிப் பெற்ற வெற்றியைக்கொண்டாடும்பொருட்டுச் சவுலின் பட்டணமாகிய கிபியாவில் சில நாட்களாக உல்லாசமான ஆடல்பாடல்களும் விருந்துகளும்

விமரிசையாய் நடந்தன. மங்கையர் கும்பல் கும்பலாக நடனத்துடன் சென்று சவுலையும் தாவீதையும் சந்தித்துப் புகழ்ச்சியான பாடல்களைப் பாடினர்.

"சவல் கொன்றது ஆயிரம்
தாவீது கொன்றது பதினாயிரம்"

என்று மாதர் பலர் இனிய குரலோடும் சுவையான இசையோடும் அணியணியாகப் பாடிப் புகழ்ந்தனர்.

தாவீதுக்குப் பதினாயிரம் வைத்துப் பாடின பாட்டு சவுலுக்குப் பொறாமையையும்மூர்க்கத்தையும் மூட்டிவிட்டது. இனிமேல் தன் ராச்சியத்தையும் அவனுக்கே கொடுத்துவிடுவார்கள்போலும் என்றெண்ணி அன்றுமுதல் மனதில் காமகாரங்கொண்டு தாவீதின்மேல் உள்ள பழைய பாசத்தைநீக்கிப் பகைக்கத் தொடங்கினான். பொல்லாத ஆவியும் சவுலின்மேல் சார்ந்தது. தாவீது வழக்கம்போலத் தன் சுரமண்டல வாத்தியத்தை எடுத்துச் செவிக்கு இனிய ராகங்களை வாசித்துக்கொண்டிருந்தான். சவுலின் கையில் ஈட்டி இருந்தது. தாவீது வாத்தியம் வாசிப்பதைப் பார்க்கப் பார்க்கக் காமகாரம் பெருகிற்று. தாவீதைச் சுவரோடு சேர்த்து ஊடுருவக் குத்திப் போடவேண்டும் என்ற நோக்கத்துடன ஈட்டியைத் தாவீதின்மேல் எறிந்தான். தாவீது வெகு சாமர்த்தியமாய் விலகிக்கொண்டபடியால் தப்பினான்.

அவனை எப்படிக் கொல்லலாம் என்றெண்ணி அநேக உபாயங்களை ஆராய்ந்தான். போர்க்களத்தில் செத்தாலும் சாகட்டும் எனக் கருதி ஆயிரம் போர்ச் சேவகருக்குத் தாவீதை அதிபதி ஆக்கினான். பெலிஸ்தர் கையால் அவனைச் சாகப்பண்ணலாம் என்று ஆலோசித்து நூறு பெலிஸ்தரைக்கொன்று அடையாளம் கொண்டு வந்தால் தன் இரண்டாம் குமாரத்தியாகிய் மீகாளை மனைவியாகக் கொடுப்

பதாகக் கூறினன். தாவீதோ பெலிஸ்தரில் நூறுக்கு இருநூறு பேர்களை வெட்டிக்கொன்று மீகாளை மனைவி யாகப் பெற்ருன். தாவீதைப் பெலிஸ்தர் கையினல் உயி ரைப் போக்கலாம் என்ற நோக்கம் தவறிப்போனது சவுலுக்கு மிகவும் விசனத்தைத் தந்தது. சில நாட் களுக்குப்பின் தாவீதைக் கொன்று போடும்படி சவுல் தன் குமாரனுகிய யோனத்தாளுேடும் மற்றும் சில ஊழிக் காரரோடும் கலந்து பேசினன். தாவீதை மிகவும் நேசித்ததால் சவுலின் சதியாலோசனை யோனத்தானுக்கு மிகுந்த துயரத்தை விளைவித்தது. தன் தகப்பனை மிகவும் கடிந்துகொண்டு தாவீது தனது உயிரையும் வெறுத்துத் தேசத்தைக் காப்பாற்றி மேன்மைப்படுத்தினதையும், உண்மையோடு அரச விஸ்வாசத்துடன் சேவித்துவருவ தையும் ஞாபகப்படுத்தினன். தாவீதுக்குக் காரண மின்றித் தீங்கு செய்வது தவறு என்றும் போதித் தான். யோனத்தானுடைய போதனையைக்கேட்ட சவு லும் மனம் மாறித் தாவீது கொல்லப்படமாட்டான் என ஆணையிட்டுக் கொடுத்தான்.

இவ்விதத் தீர்மானம் கடைசிவரையில் நிலைவரமா யிருந்தது எனச் சொல்லமுடியாது. திரும்பவும் ஒரு நாள் சவுலின்மேல் பொல்லாத ஆவிபொருந்தியது. தாவீது தன் முறைப்படியே வாத்தியத்தை எடுத்து வாசித்தான். அப்போதும் அவனை ஆழக்குத்தும்படி சவுல் அவன்மேல் ஈட்டியை எறிந்தான். தாவீது மிக்க சாதுரியமாய் விலகிக்கொண்டதால் தப்பினன். ஈட்டி சுவரில் பாய்ந்தது. தாவீது கலங்கி "சவுலின் எண் ணத்தை இனி மாற்றுவது அசாத்தியம். ஒரு நொடிப் பொழுதுங்கூட அரண்மனையில் இனித் தாமதித்தால் உயிர்

க்கு மோசம் நேரிடும்" என்று ஊகித்து அவ்விடம்விட்டு ஓடிப்போய்ச் சாமுவேல் முனியிடம் தஞ்சம் புகுந்தான்.

இதுமுதல் தாவீதுக்குக் கஷ்டகாலம் தொடங்கிவிட்டது. சவுலின் வன்மத்துக்குத் தப்பும்படி ஊர் ஊராய் அலையவேண்டியதாயிருந்தது. ஒருநாள் அவன் யோனத்தானிடம் ரகசியமாய் வந்து சவுல் தன்மேல் கோபங்கொள்ளத் தான் செய்த பாதகம் யாதென்றும், தன் பிராணனை வாங்கத் தேடுவதின் காரணம் யாதென்றும் அறிய விரும்பினன். அதற்கு அவன் "என் தகப்பன் உம்மைக் கொல்லவேமாட்டார். நீர் தப்பெண்ணங்கொண்டிருக்கிறீர். எனக்கு அறிவிக்காமல் என் தகப்பனர் ஒன்றுஞ் செய்யமாட்டார். நீர் அஞ்சவேண்டியதில்லை" என்று பகர்ந்தான். அப்போது தாவீது "உமது அபிப்பிராயம் தப்பு. நீரும் நானும் பிராண சிநேகிதர் என்பதை உம் தந்தை அறிவார். என் பிராணனைப் போக்கினல் உமக்கு அளவற்ற மனத்துன்பம் விளையும் என்றெண்ணி உமக்கு அறிவிக்கமாட்டார். இதுமட்டும் நிச்சயம். எனக்கும் மரணத்திற்கும் ஒரு அடி தூரம் மாத்திரம் இருக்கிறது. இதை நிச்சயமாய் அறிந்துகொள்வீர்" என்று மொழிந்தான்.

மீண்டும் யோனத்தானிடம் பேசத்தொடங்கி "நீர் ஓர் உபாயத்தைக் கையாளவேண்டும். உமது தகப்பனர் என்னை நிச்சயமாய்ப் பகைக்கிருரோ என்பதை இதன் மூலமாய்த் தெரிந்துகொள்ளலாம். நாளைக்கு அமாவாசை. வழக்கப்படி நான் அரசனுடன் பந்தியிலிருந்து விருந்துண்ணவேண்டியிருக்கும். என்னுடைய ஸ்தானம் காலியாயிருப்பதைக்கண்டு ராஜா என்னைப்பற்றி வினவினல், பெத்லகேமுக்கு ஓர் அவசர வேலையாய்ப்போகவேண்டுமென்று வருந்திக் கேட்டுக் கொண்டதினல் போகவிட்டேன் என்று சொல்லும். அதற்கு அவர் நல்லதுஎன்று சொல்

வாராகில் என் உயிருக்கு அபாயமில்லை. ஆனால் மன எரிச்சல் அடைந்து கடுமையான வார்த்தைகளைப் பேசுவாராகில் எனக்கு விரோதமாகப் பொல்லாங்கு இழைக்கத் தீர்மானித்துவிட்டார் என்று அறிந்துகொள்ளும்" என்றான். சவுலின் தீர்மானத்தை யோனத்தான் தாவீதுக்கு வெளிப்படுத்துவது எப்படி? அவர்கள் இருவரும் ஒருமித்து நிற்பதைக் கண்டால் இருவருடைய உயிருக்கும் ஆபத்து ஏற்படும். ஆதலால் அத்தகைய ஆபத்து நேரிடாதபடி வேறொரு சூழ்ச்சியும் செய்தார்கள். அப்போது யோனத்தான் தாவீதை நோக்கி "நீர் குன்றின்பின் ஒளிந்திருக்க வேண்டும். விருந்து முடிந்த மறுநாள் காலையில் நீர் ஒளிந்திருக்கும் இடத்திற்கு நேராக விரைந்து வந்து குறிப்பு வைத்து எய்வது போல அதற்குப் பக்கமாக மூன்று அம்புகளை எய்வேன். பிறகு நான் அழைத்து வந்த பிள்ளையாண்டானை நோக்கி 'நீ போய் அந்த அம்புகளைத் தேடி வா' என்று அனுப்புவேன்.' 'இதோ அம்புகள் உனக்கு இப்பால் கிடக்கின்றன, எடுத்துவா' என்று நான் சொன்னால் நீர் வெளியே வாரும். உமது உயிருக்கு மோசம் இல்லை. 'அதோ அம்புகள் உனக்குஅப்பால் கிடக்கின்றன' என்று நான் கூறினால் நீர் போய்விடும். கடவுள் உம்மைப்போகச் சொல்லுகிறார் என்று அறிந்துகொள்ளும்" என்று விளக்கமாகக் கூறினான்.

அப்படியே தாவீது வெளியில் ஒளிந்துகொண்டிருந்தான். அமாவாசை யன்று அரசன் பந்தியில் அமர்ந்தான். யோனத்தானும் தளபதி அப்னேரும் சவுலின் இருபக்கத்தில் தங்கள் ஸ்தானங்களில் அமர்ந்தார்கள். ஆனால் தாவீதின் ஸ்தானமோ காலியாயிருந்தது. அன்று சவுல் யாதும் கேட்கவில்லை. மறு நாளிலும் பந்தி நேரத்தில் தாவீதின் ஸ்தானம் காலியாயிருந்தது. அப்போது சவுல்

தாவீது எங்கே என்று வினவினுன். யோனத்தான் தான் முன்யூகித்து வைத்திருந்த மறுமொழியையே பகர்ந்தான். உடனே சவுல் யோனத்தான்மேல் கோபங்கொண்டு, இப்போதே அவனை அழைப்பித்து என்னிடம் கொண்டு வந்து சேர்ப்பாய். அவன் சாகவேண்டும் என்று ஆஞ்ஞாபித்தான். அப்போது யோனத்தான், ஏன் அவன் சாகவேண்டும்? அவன் என்ன தீங்கு செய்தான்? என்று கேட்டதும் சவுல் அவனைக்குத்தி வீழ்த்த அவன் மேல் ஈட்டியை வீசி எறிந்தான். யோனத்தான் சாக்கிரதையாக விலகிப் பிழைத்தான். இந்தச் சம்பவத்திலிருந்து தாவீதைக் கொன்றுவிடச் சவுல் தீர்மானித்து விட்டான் என்பது வெள்ளிடை மலையாய் விளங்கிற்று. இதை யறிந்த யோனத்தான் பந்திைவிட்டுச் சரேல் என எழுந்து போஜனம் புசியாமல் வெளியே போய்விட்டான்.

மறுநாள் காலையில் யோனத்தான், முன்னே குறித்திருந்த நேரத்தில் ஒரு சிறுவனைக் கூட்டிக்கொண்டு தாவீது ஒளிந்து கொண்டிருக்கும் மலைப்பக்கத்துக்குச் சென்றுன். ஆங்கு சிறுவனைப் பார்த்து 'நான் எய்யும் அம்புகளைத் தேடி எடுத்துக் கொண்டுவா' என்றுன். சிறுவன் ஓடும்போது அவனுக்கு அப்பால் போகத்தக்க ஓர் அம்பை விட்டான். பையன் அந்த அம்பு கிடக்கும் இடம்மட்டும் ஓடினபோது 'அம்பு உனக்கு இன்னம் அப்பால் இருக்கிறதே' என்று கூவினுன். அம்புகளைப் பொருக்கிக்கொண்டு வந்த சிறுவனுக்கு மேற்சொன்ன மொழிகளின் உட்கருத்து இன்னதென்று தெரியாது. பிறகு யோனத்தான் அந்தச் சிறுவனிடம் 'இந்த வில்லையும் அம்புகளையும் பட்டணத்துக்குக் கொண்டுபோ' என்று கட்டளையிட்டான். அவனும் அவ்வாறே எடுத்துக்கொண்டு சென்றுன்.

அச்சிறுவன் அகன்ற பின்பு தாவீது தான் ஒளிந்திருந்த இடத்திலிருந்து வெளியே வந்து யோனத்தானை மூன்று முறை கீழே விழுந்து நமஸ்காரம் செய்தான். பின்பு இருவரும் அன்பின் மேலீட்டால் முத்தஞ்செய்து கலங்கி அழுதார்கள். இனி ஒருவரையொருவர் காண முடியாதெனத் தெரிந்தமையால் மிக விசனமடைந்து பிரிவாற்றுமையால் வருந்திப் பிரிந்தனர். தாவீது இதுமுதல் தேசத்திலிருந்தும், தேசக் கூட்டத்திலிருந்தும் புறம்பாக்கப்பட்டவனுனன்.

அத்தியாயம் 5

களைகணுத்தம் மடைந்தார்க் குற்றுழியும் மற்ருேர்
விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார்—தளர்நடைய
தூனுடம்பென்று புகழுடம்போம்புதற்கே
தானுடம் பட்டார் கடாம்.

தாவீது அங்கிருந்து புறப்பட்டுப் பூஜகனை அகிமெலேக்கு இருக்கும் ஊருக்குள் பிரவேசித்தான். பூஜகன் அவனேக்கண்டதும் நடுநடுங்கி வியர்த்து தாவீதை நோக்கி “நீர் மெய்க்காவலின்றித் தனியே வருவதன் காரணம் யாது? என்று வினவினுன். தாவீது மறுமொழியாக, “அரசன் ஓர் இரகசிய கைங்கரியத்திற்கென்று என்னை அந்தரங்கமாக அனுப்பியிருக்கின்ருன். என்னுடன் வந்த சேவகர்கள் ஊருக்கு வெளியே மறைந்திருக்கின்றனர். உண்பதற்கு உணவு ஏதாவது உண்டா? பத்தோ, ஐந்தோ எத்தனை அப்பம் ஆனுலுஞ்சரி என் கையில் கொடும்” என்று உண்மையை மறைத்துப் புகன்ருன். பரிசுத்த மேஜையில் தெய்வ சந்நிதானத்தில் நாடோறும் வைக்கப்படும் பன்னிரண்டு அப்பங்களைப் பூஜகன் எடுத்துத் தாவீதிடம் கொடுத்தான். அரசனுடைய

68128

பணி அவ்வளவு அவசரமானதால் ஆயுதங்களைக் கொண்டு வர அவகாசம் இல்லை என்றும், பூஜகனிடத்தில் ஈட்டியோ, பட்டயமோ ஏதாவது ஆயுதங்கள் உண்டோ என்றும் கேட்டான். கோலியாத்தின் ஆயுதங்கள் மட்டும் அங்கே இருந்தமையால், அவைகள் தனக்கு உதவியாய் இருக்கும் என்று எண்ணி எடுத்துக்கொண்டு பெலிஸ்தியரின் பட்டணமாகிய காத்தில் அரசுபுரிந்த ஆகீஸ் அரசனிடம் போய்ச் சேர்ந்தான். ஆங்குள்ள மனிதர்கள் தாவீதைக் கண்டதும் ஆகீஸ் அரசனிடம் "இவன் கோலியாத்தைக் கொன்றவன். சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம் என்று இவனைக் குறித்தல்லவோ மங்கையர் மிக்க புகழுடன் கொண்டாடினார்கள். இவன் எப்படி இங்கு வரலாம்" என்று ஆட்சேபித்தார்கள். தன்னை அரசன் கொன்றுவிடுவான் என்று தாவீது பயந்து பைத்தியக்காரனைப்போல் பாசாங்கு செய்தான். அதனால் அங்கிருந்து தூரத்தப்பட்டுத் தன் சொந்த ஊரான பெத்லகேமுக்குக் கிழக்கே உள்ள அதுல்லாம் என்னும் குகைக்கு வந்து அங்கேவசித்து வந்தான். அவனது தாய் தந்தையரும், சகோதரரும், தகப்பன் வழியைச் சேர்ந்தோர் யாவரும் அவனிடம் வந்து கூடினர். தினந்தோறும் கல்யாண விருந்துபோல் பந்தி நடந்தது. இதைக் கேள்வியுற்ற கடன் பட்டவர்களும், ஒடுக்கப்பட்டவர்களும், மற்ற வறியோரும் தாவீதிடம் போய் அண்டிக்கொண்டனர். இப்படிக் கூடினவர்களில் அறுனூறுபேர் போர்புரியக் கூடியவர்கள். அவர்களுக்குத் தாவீது தலைவனானன். தகப்பனையும் தாயாரையும் தன்னுடன் வாழ்வது தகுதியாயிராதென்றெண்ணி மோவாப் நாட்டின் அரசனின் அனுமதிப்படி அவன் தேசத்தில் தங்கியிருக்கும்படி ஏற்பாடு செய்தான்.

சவுலின் கொடுமையான ஆளுகைக்குப் பயந்து தாவீதிடம் பலர் சேர்ந்து கொண்டார்கள் என்பதைச் சவுல் கேள்விப்பட்டபோது மிகவும் பயந்தான். தன் ஊழியக்காரர்மீது மிகுந்த கோபம் மூண்டவனானான். தாவீதுக்கு அப்பமும் ஆயுதமும் கொடுத்து உதவிபுரிந்த அகிமெலேக்கையும், அவன் வீட்டார் அனைவரையும் சங்காரம் செய்தான். தோவேக் என்னும் பாதகனது கோள்வார்த்தையால் இந்தக்கேடு சம்பவித்தது. இதைக் கேட்ட தாவீது தான் சொன்ன பொய் வார்த்தையினால் அல்லவோ ஒரு குடும்பம் முற்றும் நிர்மூலமாக்கப்பட்டது என்று மனம் உருகி வருந்தினான். என்றாலும் பூஜகன் அகிமெலேக்கின் மகனான அபியத்தார் என்பவன் ஈசன் அருளால் தப்பிப் பிழைத்துத் தாவீதிடம் வந்து சேர்ந்தான். தாவீதும் அவனுக்கு மனப்பூர்வமாய் அடைக்கலம் கொடுத்துத் தன்னோடு இருக்கும் மட்டும் தீங்கு நேராதபடி பார்த்துக் கொள்வது தன் கடமை என்று உறுதி கூறினான்.

அத்தியாயம் 6

“ ஆலைப்பலாவாக்கலாமோ வருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்கவசமாமோ—நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்கலாமோ கருணையிலா
மூர்க்கனைச் சீராக்கலாமோ ”.

இதுமுதல் தாவீது அதுல்லாம் குகையிலிருந்து கொண்டு நினைத்த நேரங்களில் துணிகரமான வீரச்செயல்களைச் செய்து வந்தான். ஒரு சமயம் பெலிஸ்தியரைத் தாக்கி அவர்களுடைய சொத்துக்களைக் கொள்ளையடித்துக் கொண்டு வருவான். இன்னொரு சமயம் பக்கத்திலுள்ள வேறொரு ஜாதியாரிடம் போய் அவர்கள் கிராமங்களைச் சுட்டெரித்து ஆண் பெண் அனைவரையும் சங்கரித்து வரு

வான். தாவீதை எப்படிக் கொல்லலாம் என்று சவுலும் சதியாலோசனை செய்து தன் சேனையுடன் தாவீதைத் தொடர்ந்து செல்வது வழக்கமாய்ப் போய்விட்டது. ஒரு நாள் சவுல் கையாண்ட சூழ்ச்சிக்குள் தாவீதும் அவன் மனிதரும் அகப்பட்டுக்கொள்ள நேர்ந்தது. ஆனால் தாயினும் அருள்வாய்ந்த தயாபரனின் அனுக்கிரகத்தால் தாவீதும் மற்றையோரும் தப்பினார்கள். அச்சமயம் சவுலின் தேசத்தைப் பெலிஸ்தர் ஜெயித்தார்கள் என்ற செய்தியைக் கேட்டதும் சவுல் இன்னது செய்வது எனத் தோன்றாமல் மயங்கி அவ்விடத்தை விட்டு ஓடிப்போகலானான்.

மறுமுறை தாவீதும் அவன் மனிதரும் கரந்துறைந்த குகைக்குள் சவுல் அறியாமல் பிரவேசித்தான். குகை இருளாயிருந்ததால் தாவீது உள்ளேயிருக்கும் விஷயம் சவுலுக்குத் தெரியாமற் போயிற்று. சவுலின் உயிர் தாவீதின் கையில் சிக்கியது. தாவீது அவனைக்கொல்ல நினைத்தால் ஒரு நொடியில் உயிரை வாங்கியிருக்கலாம். அவனுடைய ஏவலாளர்கள் சவுலைக் கொல்லும்படி தூண்டினார்கள். தாவீது அதற்கு உடன்படவில்லை. ஆனால் சவுலுக்குத் தெரியாமல் அவன் வஸ்திரத்தின் ஓரத்தில் கொஞ்சம் அறுத்துக்கொண்டான். சவுல் குகையைவிட்டு வெளியே வந்தபின் தாவீது அவனுக்குப் பின்னே சென்று 'ராஜாவாகிய எனது ஆண்டவனே' என்று கூப்பிட்டான். சவுல் திரும்பிப் பார்த்தபோது கெபிக்குள் சவுல் வந்ததையும் அவனைச் சுலபமாய்க் கொன்றிருக்கக்கூடும் என்பதையும் கூறித் தன் கையிலிருந்த உத்தரீயத்தின் பகுதியை உயர்த்திக்காண்பித்தான். சவுல் இடியொலிகேட்ட நாகம்போலத் திடுக்கிட்டுத் தாவீதைப் பார்த்துச் சத்தமிட்டு அழுது "நீ என்னிலும் நீதிமான். நீ எனக்கு நன்மை புரிந்தாய். நானோ உனக்குத் தீமையே தேடினேன். சாட்சாத் கட

வுள் உனக்கு அருள்புரிவாராக! நிச்சயம் நீ என் ஸ்தானத்தில் அரசு புரிவாய். தேசம் உனது ஆளுகையின் கீழ் செழித்தோங்கும்" என்று ஆசிகூறுவதைப்போலப்பாவனை செய்து தன் சந்ததியாருக்கும் தன் குடும்பத்துக்கும் தீங்கு விளைவிப்பதில்லை என்று ஆணையிட்டுத்தரும்படி கேட்டான். தாவீதும் உண்மை என்றெண்ணிச் சவுலுக்கு அவன் கேட்ட வண்ணமே வாக்களித்தான். பிறகு சவுல் தனது உட்பகை எல்லாவற்றையும் வேர் அறுத்தவன்போல் பாசாங்கு செய்து தன் இருப்பிடம் சென்றான். தாவீதோ கலக்கமற்றுச் சனியன் தொலைந்தது என்றெண்ணி மிக்க உவப்புடன் தனது அரணிப்பான குகையிடத்திற்கு ஏறிப் போனான்.

சில தினங்களுக்குள் சவுல் திரும்பவும் தாவீதைக் கொல்ல மூவாயிரம் படைகளுடன் புறப்பட்டான். ஓர் இரவில் சவுலும் அவன் வீரரும் காட்டில் நித்திரை செய்யும்போது தாவீதும் அவன் தங்கை மகனான அபிசாயும் பாளையத்திற்குச் சென்று அங்கும் இங்கும் அலைந்து கடைசியில் சவுல் படுத்திருந்த இடத்திற்கு வந்தார்கள். சவுல் ஆழ்ந்த நித்திரையில் இருந்தான். அவனைச் சுற்றிலும் சேனாதிபதியும் தளகர்த்தனும் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். சவுலின் ஈட்டி அவன் தலைமாட்டில் நிலத்தில் குத்திவைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது அபிசாய் தாவீதைப் பார்த்து, நமக்குள்ள பழம் பகையை முடிக்க இதுவே தக்க தருணம். சவுலை ஒரே குத்தாய்க் குத்திக் கொன்றுவிடட்டுமோ? என்று வினவினான். தாவீது "அவர் கடவுளால் அபிஷேகம் பண்ணப்பட்ட அரசர். ஆகையால் அவருக்குத் தீங்கு செய்யலாகாது. தலைமாட்டிலிருக்கும் ஈட்டியையும், தண்ணீர்ச் செம்பையும் எடுத்துக் கொண்டு செல்வோம்" என்று சொன்னான். அப்படி

N34

அவைகளை எடுத்துச் செல்லும்போது ஒருவரும் பார்க்கவுமில்லை, அறியவுமில்லை, ஒருவரும் விழித்துக்கொள்ளவுமில்லை. இருவரும் கடந்து தூரத்திலிருந்த மலையின் கொடுமுடியில் ஏறி நின்றார்கள். அப்போது தாவீது சேனாதிபதியாகிய அப்னேரை உரக்கக் கூப்பிட்டு, நீர் மகா வீரர் அல்லவா? நீர் உமது தலைவனான அரசனைத் தக்கபடி காவல் காக்கவில்லை. கடந்த நிசியில் அவரைக் கொல்லுவதற்கு ஒருவன் வந்திருந்தான். அவருடைய தலைமாட்டில் இருந்த ஈட்டியையும் செம்பையும் இதோ பாரும் என்று உயர்த்திக் காட்டினான். சவுல் தாவீதின் குரலைக் கேட்டு "என் குமாரனாகிய தாவீதே இது உன் சத்தமல்லவா" என்றான். அதற்குத் தாவீது "என் சத்தந்தான். நீர் உமது அடியானை இப்படித்தொடர்ந்து வருவானேன்? நான் செய்த பொல்லாங்கு என்ன?" என்று தன்னலங்கருதாச் சதுரனான தாவீது கேட்டான். அதைக் கேட்டுத் தன்னலம் ஒன்றையே கருதும் தன்மையனான சவுல் மெய்யாக வருந்துகிறவனைப்போல நடித்து "என் குமாரனாகிய தாவீதே திரும்பிவா. என் உயிர் உனக்கு மிக அருமையாய்த் தோன்றினபடியால் இனி உனக்கு யாதொரு தீங்கும் செய்யமாட்டேன். நானே ஒழுக்கம் தவறிய உள்ளத்தன். கொடியனவும் பரிகாரம் செய்யக்கூடாதனவுமான தவறுகளைச் செய்துவிட்டேன்" என்று ஓலமிட்டான்.

ஆனால் சவுலின் அத்தகைய மொழிகளை யார்தான் உட்கொள்ளக்கூடும். தாவீதும் சவுலின் வார்த்தைகளை உண்மையாக ஏற்றுக்கொள்ளாவிடினும் "இதோ உம்முடைய ஈட்டி இங்கே இருக்கிறது, தூதுவன் ஒருவனை அனுப்பி வாங்கிக்கொண்டுபோம். உம்முடைய உயிர் என் பார்வைக்கு எப்படி அருமையாய் இருந்ததோ, அப்படி

யே என் உயிரும் என்னைப் படைத்த இறைவனுக்கு அரு மையாய் இருப்பதாக'' என்று கூறினன். சவுல் மீண்டும் தாவீதை நோக்கி இன்சொல் பல இயம்பி, "நீ பெருந் தன்மையுள்ளவன். அடக்கம் பொருந்தியவன். உன் னிடம் இறைவனது கருணை எல்லையற்றதாய் மிளிர்கின் றது. பிற்காலத்தில் பிரக்யாதி பெற்றவனுய் விளங்குவாய்'' என்று வாயாரப் புகழ்ந்துவிட்டுத் தன் இடத்திற்குத் திரும்பினுன் தாவீதும் தன்வழியே சென்ருன். இதன் பின் ஒருவரை யொருவர் சந்திக்கவேயில்லை.

அத்தியாயம் 7

" தீய செயல் செய்வா ராக்கம் பெருகினும்
தீயன தீயனவே வேறல்ல—தீயன
நல்லன வாகாவா நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமாப் போல்.''

சவுலை நம்புவதைப் பார்க்கிலும் மண் குதிரையை நம்ப லாம்என ஊகித்துத் தாவீது யூதேயா நாட்டை முற்றிலும் துறந்து பெலிஸ்தியர் தேசம் புகுந்து வாழ்வதே நலம் என்று எண்ணினுன். காத்தின் அரசனுன ஆகிஸ் தாவீ தைக் கண்டதும் மனமகிழ்ந்து இத்தகைய வீரன் தன் தேயத்தில் தங்குவானுகில், தனது பகைவரைத் தோற் கடித்து மேற்கொள்ளப் பேருதவியாயிருக்கும் என்று எண்ணி அவனைத் தன் நகரிலேயே தாமதிக்க அனுமதித் தான். ஆனுல் ஆகிஸுடைய பிரபுக்களும் அதிபதிகளும் தாவீதையும் அவன் மனிதரையும் யுத்த காலத்தில் நம்பு வது பெருந் தப்பு என்றும், இஸ்ரவேலருக்கு விரோத மாகப் போர் நிகழும் காலத்தில் இவர்களைப் போர்க்களத் தில் சேர்ப்பது தகுதியல்லவென்றும், போர் முனையில்

எதிர்ப்பக்கம் சார்ந்து தமக்கு விரோதமாகப் போர் புரியவும் நேரிடும் என்றும் யுக்தி சொன்னார்கள்.

தன் தாய்நாட்டாருக்கு எதிரில் நின்று அமர்புரிவது துரோகச் செயலாகுமே! என் செய்வது? என்று திகைத்துநின்ற தாவீதுக்கு மேற்சொன்ன ஆலோசனை வியப்பைக் கொடுத்துத் தயக்கத்தை அவன் அகத்தினின்று விரைவில் அகற்றிவிட்டது. ஆகிஸ் அரசன், தாவீதும் அவனைச் சேர்ந்த அறுநூறு பேர்களும் அல்லல் நீங்கி ஆறுதலாய் வசிக்குமாறு சிக்லாக் என்னும் பெரும் பகுதியைத் தாவீதுக்கு அளித்தான். தாவீது அங்கு பதினாறு மாதம் வரையில் வாழ்ந்து வந்தான். அதன் முடிவில் பெலிஸ்தியருக்கும் இஸ்ரவேலருக்கும் நீடித்த காலமாய்க்கடும்போர் நடந்தேறியது. இறுதியில் இஸ்ரவேலர் போர்க்களத்தில் தோல்வியுற்று அதோகதியானார்கள். பலர் சிதறுண்டு மாண்டார்கள். யோனத்தானையும் அவன் சகோதரர் இருவரையும் பெலிஸ்தர் வெட்டி வீழ்த்தினார்கள். பகைவருக்குப் புறங்காட்டித் தோல்வியுற்ற இழிவைச் சவுல் நினைந்து நினைந்து துக்கமும் வெட்கமும் தூண்டவே, எதிரியின் வாளால் உயிர் துறப்பதைப் பார்க்கிலும் தற்கொலை புரிந்துகொள்வது தகுதி என்று கருதித் தன் வாளை நட்டு அதன்மேல் வீழ்ந்து இறந்தான். சவுலும் அவன் குமாரரும் மடிந்து போனார்கள் என்று போரில் கலந்து கொள்ளாத மக்கள் கேள்விப்பட்டபோது அவர்கள் தங்கள் இருப்பிடங்களைவிட்டுக் காட்டுக்கு ஓடிப்போனார்கள்.

மேற்சொன்ன சம்பவம் நிகழும்போது தாவீது சிக்லாக்கிலேயே இருந்தான். சவ்லின் மரணத்தைக் கேள்வியுற்று வேதனைப்பட்டான். யோனத்தான் உயிர் நீத்த செய்தியும் அவனுக்கு ஆறாத்துயரத்தை விளைவித்தது. சகிக்கமுடியாத மனோவேதனையால் கண்ணீர் சொரிந்து

கலங்கி நின்றான். சவுலுக்காகவும் யோனத்தானுக்காக வும் தாவீது துக்கித்துப் புலம்புதலாகப் பின்வருமாறு பாடினான் :—

" உயிரோடு இருக்கையில் சவுலும் யோனத்தானும் பாசமும் நேசமுமாய் இருந்தார்கள். மரணத்திலும் அவர் கள் பிரியவில்லை. கழுகுகளைப் பார்க்கிலும் மிக்க வேக மும் சிங்கங்களைப் பார்க்கிலும் மிகுந்த பலமும் பொருந்திய வர்களாய் இருந்தார்கள்."

" என் சகோதரனாகிய யோனத்தானே! உனக்காக நான் உள்ளங்கலங்குகின்றேன். நீ எனக்கு மிகவும் இனி யனாய் விளங்கினாய் உனது சிநேகம் போற்றத்தக்கதாயி ருந்தது. மாதர்களின் அன்பைப் பார்க்கிலும் மாண்புற்ற தாய் இருந்தது. சமர்த்தர்கள் எல்லோரும் சாய்ந்து போனார்களே! போர்க் கருவிகள் யாவும் பொடி ஆயி னவே!"

மேற்சொல்லிய புலம்பலின் அற்புதச் சொற்சித்திரங் களை முதல் நூலில் உள்ளவாறு ஓதிப் பார்த்தால், தாவீ தின் கவித்திறமையும், சங்கீத பாண்டித்தியமும் நன்கு விளங்கும்.

அத்தியாயம் 8

" மலைமிசைத் தோன்றும் மதியம் போலத்
தலைமிசைக் கொண்ட குடையர்—நிலமிசைத்
துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லா
லெஞ்சினா ரிவ்வுலகத் தில்."

சவுல் மரித்தபின்பு தாவீது பெலிஸ்தியரின் நாட்டை விட்டுத் தன் சுயநாடாகிய யூதேயாவுக்கு வந்தான். அவன் வருகைக்கு ஆவலுடன் காத்திருந்த யூதேயாவின் குடிகள் மிக்க உவப்படைந்து ஒருங்குகூடித் தாவீதைச் செங்கோல் செலுத்தும் முடிமன்னனாகக் கருதி அவனுக்கு அபிஷேகம்

பண்ணினார்கள். ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர், வட பாகத்திலுள்ள இஸ்ரவேல் வமிசத்தினரும் தாவீதைத் தங்களுக்கு அரசனாக்க விரும்பி அவனிருந்த இடத்துக்கு வந்து அவனை சிங்காதனம் ஏற்றி முடிசூட்டினார்கள். இப்படியாகத் தாவீது கானான் தேசம் முழுமைக்கும் காவலனானான். தான் வாழ்ந்துவந்த எப்ரோனை விட்டு எருசேலம் பட்டணத்தைத் தலைநகரமாக்கி அதைத் தாவீதின் நகரம் என அழைத்தான்.

சொற்ப காலத்துக்குள் தாவீதின் செல்வமும், செல்வாக்கும், அதிகாரமும் செழித்தோங்கின. தாவீது நன் மதியுடையோனாய், நன்மையிலும் தீமையிலும் நன்னெறியைக் கடைப்பிடித்தோனாய், பேராண்மையுள்ள போர் வீரனாய், தன்னிடம் அன்பு காட்டியவர்க்குமட்டும் அல்லாமல், சவுலிடத்தும், யோனத்தானிடத்தும் எவர் கழிவிரக்கங் காண்பித்தாரோ, அவரையும் இளகிய மனதுடன் நடத்தும் இயல்புடையோனாய்ச் சிறந்த மன்னன் எனப் பேர் வாங்கிப் பெருமையுற்று வந்தான். தன் ஆருயிர் நண்பனான யோனத்தானுக்குக் கொடுத்த வாக்குறுதிக்கிணங்க அவன் சந்ததியார் இடத்திலும் தண்ணளி காட்டி வந்தான். தனது நண்பனுக்குச் சப்பாணியான ஓர் மகன், உண்ண உணவின்றித் தவித்துக்கொண்டிருப்பதைக் கேள்வியுற்ற தாவீது அவனைத் தன் அகத்துக்கு அழைத்துவந்து சாகுந்தனையும் சம்பிரமமான சவாட்சணைசெய்து ஆதரித்துவந்தான்.

எபூசியரை வென்று அவர்க்கு அரணாய் உள்ள எருசலேமைப் பிடித்துத் தன் அரண்மனையை அங்கே அமைத்தான். பெலிஸ்தியரையும் இன்னும் அருகிலுள்ள குறுநில மன்னர்களையும் தோற்கடித்துக் கப்பங்கட்டும்படி செய்வித்தான். ராணுவத்தைப் பலப்படுத்திப் பகுதிபகுதியாகப்

பிரித்து அவைகளுக்குப் பற்பல அதிபதிகளை ஏற்படுத்தி எந்த நேரத்திலும் போர்க்களம்புகத்தக்க வீரர்களாக விளங்கச் செய்தான். கடவுளை வழிபடுவதில் மிகவும் மனஞ் செலுத்திப் பகவத் சேவைக்குரிய பாக்களைப் பண்படுத்தி, அவைகளைப் பரிவுடன் பாடக்கூடிய பாடகர்களையும் வளப்படுத்தினன். பெலிஸ்தரால் கவரப்பட்டுச் சீரழிந்துகிடந்த தெய்வ சம்பந்தத்தைக்காட்டும் உடன்படிக்கைப் பெட்டியைத் தலைநகரத்திற்குக் கொண்டுவரச்செய்து பூஜிக்கும் பூஜகர்களை ஒழுங்குபடுத்தி யாவருக்கும் பகவத் பக்தி உண்டாகும்வண்ணம் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்தான். அப்போது தேசம் அமைதியுற்றிருந்தது. சமாதானம் பரவிவந்தது. மக்கள் அனைவரும் தத்தம் வீடுகளில் கவலையின்றி வாழ்ந்து, தத்தம் தோட்டத்தின் விளைபொருள்களை ஆதாரமாகக்கொண்டு சுகித்துவந்தார்கள். தாவீதையும் அவனது அரசு முறையையும் போற்ருதார் எவரும் இலர்.

ஆயினும் மானிட வாழ்க்கையில் இன்பமும் துன்பமும், வாழ்வும் தாழ்வும், நன்மையும் தீமையும் கலந்திருப்பது இயற்கை யாதலால் தாவீதுக்கும் அவனுடைய இறுதிக்காலத்தில் பல அல்லல்கள் உண்டாயின.

தாவீதுக்கிருந்த பல ஆண்மக்களுள் அப்சலோம் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் அழகு அமைந்த ஆனந்த புருஷன்; மாசின்றி விளங்கும் மன்மதன் போன்றவன்; இளங்கதிரைக்கொண்ட ஞாயிற்றைப்போன்ற இனிமை பொருந்திய தோற்றத்தினன். தாவீதுக்கு அத்தியந்த பிரியமான அருமைப் புதல்வன். "அரியதவப்பேருய் அவதரித்த ஆணிமுத்தே! பாரோர் புகழும் எங்கள் பன்னரிய பாக்கியமே" என்று பாராட்டி வளர்க்கப்பட்ட பாலியன். 'சின்னஞ்சிறு பருவத்தி

லிருந்தே கண்டித்து வளர்க்கப்படாததால், அப்சலோம் தான் என்னும் மமதைகொண்டு தந்தையாகிய தாவீதை அரசபதவியிலிருந்து நீக்கிப் பட்டத்துக்குவர முயற்சிசெய்தான். அப்சலோமும், அவனது துன்மதித் துணைவரும் சதியாலோசனைசெய்து பெருஞ்சேனை திரட்ட முயன்றார்கள். அழகும், இளமையும், செல்வமும் ஒருங்கே அமையப் பெற்றிருந்த அப்சலோமிடம் பலர் போய்ச் சேர்ந்துகொண்டார்கள்.

தாவீது இதைக் கேள்வியுற்றதும் மனதில் கிலேசம் அடைந்தான். எருசலேமில்தான் இருப்பின் அப்சலோம் தன் நகரத்தைத் தாக்கி முற்றுகையிட்டுக் குடிகளைக் கொன்றுவிடுவான் என்று உணர்ந்து, தானும் தன்னோடிருந்த பராக்கிரமசாலிகளான அறுநூறு பேர்களும் கீதரோன் என்னும் சிற்றாற்றைக்கடந்து காட்டிற்குள் புகுந்தனர். அரசபக்தியுள்ள அநேகர் அவனுடன்சென்று சேர்ந்துகொண்டனர். அவர்கள் எல்லோரும் அங்கிருந்து யோர்தான் நதியைக் கடந்து கிழக்கே போயினர் தாவீது தலைநகரைவிட்டுப் போய்விட்டான் என்று கேள்விப்பட்டதும் அப்சலோமும் அவன் மனிதரும் தாவீதைப் பின தொடர்ந்து சென்றனர். ஆரணியத்தில் இருபக்கத்தார்க்கும் போர் தொடங்கியது. தாவீது போரில் கலந்துகொள்ள ஆசையாயிருந்தான். ஆனால் அவனுடைய ஊழியக்காரரோ அப்படிச் செய்யலாகாது என்று தடுத்துவிட்டார்கள். தன் சேனை அமர்புரிய அணிவகுத்துச் செல்வதைக் கண்ணுற்ற தாவீது, தலைமையான மூன்று தளபதிகளையும் பார்த்து அப்சலோமுக்குத் தீங்கு விளைவிக்கலாகாதென வருந்திக் கேட்டுக்கொண்டான். சண்டை இடைவீடில்லாமல் நடந்தது. அப்சலோம் தோல்வி அடைந்தான். மரங்கள் அடர்ந்துள்ள இடமானதால் தோல்வி

யடைந்த வீரர்கள், ஓடமுடியாதபடி சிக்கிக்கொண்டார்கள். அதனால் அநேகம் பேர்கள் வெட்டுண்டு இறந்தனர்.

அந்தக்கால வழக்கப்படி அப்சலோம் ஒரு கோவேறு கழுதையின்மேல் ஏறி ஓடினான். சன்னல் பின்னலான ஓர் பெரிய கருவாலி மரத்தின் கீழ்ச்சென்றபோது அப்சலோமின் தலை மயிர் மரத்தில் மாட்டிக்கொண்டது. அவன் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே தொங்கி ஊசலாடினான். அவன் ஏறிச்சென்ற கழுதையோ வெருண்டு அப்பால் ஓடிப்போயிற்று. அதைக்கண்ட வீரன் ஒருவன், தளபதியான யோவாபிடம் அறிவிக்க அவன் "நீ அந்தக்கணமே அவனுயிரைப் போக்கியிருந்தால் பத்து வெள்ளிக்காசும், ஒரு வெள்ளிக் கச்சையும் உனக்குக் கொடுத்திருப்பேனே" என்று கடிந்துகொண்டான். அப்போது அந்த வீரன் "நீர் ஆயிரம் வெள்ளிக் காசுகளை நிறுத்துக் கொடுத்தாலும் கோமகன்மேல் என் கையைப் போடமாட்டேன். பிள்ளையாண்டானாகிய அப்சலோமைக் காப்பாற்றுங்கள் என்று அரசன் ஆணையிடவில்லையா" என்று அறிவித்தான். யோவாப் மிகுந்த ஆத்திரப்பட்டு அவனுடன் தர்க்கம் பண்ணுவதைவிட்டு மூன்று வல்லயங்களை (எறியீட்டி)க் கையில் எடுத்துக்கொண்டு அப்சலோம் உயிரோடு தொங்கிக்கொண்டிருக்கும் இடத்திற்குச் சென்று அவன் நெஞ்சில் ஈட்டிகளால் குத்தினான். அப்பொழுது யோவாப் என்பவன் போரை நிறுத்தும்படி எக்காளம் ஊதித் தாவீதுக்கு அப்சலோம் மடிந்ததையும், தாம் வெற்றியடைந்ததையும் தூதுவர் மூலமாய்ச் செய்தி அனுப்பினான்.

தாவீது தன் நகரத்தின் ஒலிமுக வாசலில் அளவற்ற சோகத்தோடு யுத்தச் செய்திக்காகக் காத்திருந்தான்.

ZA
10-65

தூதுவர்கள் வந்ததும் அப்சலோம் சுகமாய் இருக்கிருனு என்று ஆத்திரத்துடன் விசாரித்தான். அவன் வெட்டுண் டிறந்ததை அறிந்ததும் ஆருத்துயரமடைந்தான். துன்பக் கண்ணீர் சொரிந்து ஐயோ என்று அலறினன். பின்பு எழுந்து மேல்வீட்டிற்குச் சென்று "என் மகனே! என் மகனுகிய அப்சலோமே! என் மகனே! நான் உனக்காகச் செத்திருந்தால் நலமாயிருக்குமே. அப்சலோமே! என் மகனே! என் மகனே!" என்று பிரலாபித்து அழுதான்.

தாவீது அத்தகைய துயரமடைந்ததைக் கேள்வியுற்ற ஜனங்களுக்கு அந்தத் தினம் வெற்றி நாளாய் விளங்காமல் துக்கநாளாய் மாறிற்று. ஜெயம்பெற்றவர்கள்போலக் கம்பீரமாய்ப் பட்டணத்துக்குள் செல்லாமல் நாணங்கொண்டு நலிவுடன் பிரவேசித்தார்கள். அரசன் தன் முகத்தை மூடிக்கொண்டு பெருங்குரலுடன் "என மகனே! என் மகனே! மாண்டாயோ?" என்று அலறிக்கொண்டிருந்தான்.

மேலும் தாவீதினுடைய புதல்வர்களால் அவனுக்குத் துன்பம் விளைந்ததேயொழிய இன்பம் இல்லை. அம்னேன் முறைகேடான காரியத்தைச்செய்து ராஜ குடும்பத்தை அவமானப்படுத்தினன். அதோனியா என்னும் மற்றொரு குமாரன் தாவீதின் அனுமதியின்றித் தன்னை அரசனுக்கிக் கொண்டான். சிமேயி என்னும் வம்பனுல் தாவீது இழித்துரைக்கப்பட்டான். சேபா என்னும் புல்லியன் இஸ்ரவேலரைத் தாவீதின் ஆளுகையைவிட்டுப் பின்வாங்கப் பண்ணினன்.

என்றுலும் தாவீது தெய்வபக்தியில் சிறந்து விளங்கினன். கடவுளை நம்பித் துன்பம் நேரும்போதெல்லாம்

கடவுள் சித்தமென்றெண்ணிப் பொறுமையுள்ளவனாய் இருந்தான். "கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்கு அஞ்சுவேன்? அவர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கும் பயப்படேன்" என்று பாடி எகோவாவின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவனாய் வாழ்ந்து வந்தான்.

பூமி அதிர்ந்தாலும் ஆழி பொங்கினாலும்
என்ன நேரிட்டாலும் அஞ்சிடேன்!
எகோவா துணை நிற்கிறார், அஞ்சிடேன்!

என்று மனதில் உரங்கொண்டு தீர புருஷனாய் விளங்கினான்.

கடவுளைத் துதிப்பதிலும் புகழ்வதிலும் ஜனங்கள் தேர்ச்சியடையும்படியாகச் சிந்தைக்கும் செவிக்கும் இனிய சங்கீதப் பாக்களைத் தொகுத்து வைத்தான். பாடகர்களைக் கிரமமாக ஏற்படுத்தி அவைகளை இனிமையாகவும் இசையோடும் பாடும்படி கற்பித்தான்.

தாவீதின் சங்கீதப் பிரார்த்தனைகளைப் பழங்காலம் முதற்கொண்டு பாடிப்பாடிப் பரமனின் அருள்பெற்று ஆறுதல் அடைந்த பற்பல தேசத்துப் பக்தர்கள் பல்லாயிரம் பேர்கள் இருக்கலாம்.

சங்கீத மணியாகிய தாவீது நாற்பது வருடம்வரை இஸ்ரவேலை அரசாண்டு பெறுவதற்கருமையான பேறுகளையும், கிடைத்தற்கரிய செல்வங்களையும் பெற்று, அழியாப் புகழுடன் சிறந்து விளங்கிச் சுகத்திலும் துக்கத்திலும் பகவான் திருவடிகளைக் கனவிலும் மறவாது மனம், மொழி, மெய்களால் வழிபட்டு வாழ்ந்து இருந்து, தன் எழுபதாவது வயதில் இன்பவடிவாயுள்ள இறைவன் திருவடியை எய்தினான்.

68128
O6:4196w
N34

Jegam & Co., Trichy

இந்நூலாசிரியர் இயற்றிய வேறு நூல்கள்

விவிலிய நூற் கதைகள்

1. இயேசுநாதரின் இனிய சரிதை
3. தறுகண்மை வாய்ந்த தானியேல் வீரன்
*4. விதிகள் அமைத்த வேதியன் மோசே
*5. சற்குணம் வாய்ந்த தநயன் யோசேப்
*6. பல்கலை ஆய்ந்த பவுல் பிரசாரகன்

[* in preparation]

அபிப்பிராயங்கள்

1. இயேசுநாதரின் இனிய சரிதை

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்து, உலகம் உய்ய உழைத்துப் பணிபுரிந்த பெரியாராகிய மகான் இயேசுவின் திவ்ய சரித்திரத்தைச் சிறுவர்களும், சிறுமிகளும் எளிதில் வாசித்தறியுமாறு இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இன்பம் விடுத்து, துன்பமேற்று, அன்பே உருவாக விளங்கிய இயேசுநாதரின் வாழ்க்கைச் சரித்திரத்தைப் படிப்பதால் கிறிஸ்துவர்கள்மட்டுமன்றிச் சமரச உணர்ச்சி பரவிவரும் இந்நாளில் பிறமதத்தினரும் தூய்மை பெறலாம். கிறிஸ்தவர் வேதாகமமாகிய பைபிளில் மலிந்துகிடக்கும் எண்ணிறந்த பக்தர்களின் வரலாறுகளை எளிய தமிழ் நடையில் எழுதிச் சிறு புத்தகங்களாக வெளியிட ஆசிரியர் முன்வந்திருப்பது போற்றற்குரியது விலை அணா 4.

3. தறுகண்மை வாய்ந்த தானியேல் வீரன்

யூதேயா நாட்டில் வசித்துவந்த யூத மரபைச் சேர்ந்த தானியேல் என்ற கிறிஸ்தவ பக்தரின் வரலாறு இந்நூலில் விளக்கப்பட்டிருக்கிறது யூதேயா நாட்டைப் பாபிலோன் மன்னர்கள் தம் வசப்படுத்திக்கொண்டதால் யூதர்களில் பலர் அவர்கள் கையில் சிக்கினர். அத்தகையாரில் ஒருவர் தானியேல் யூத முறையான தெய்வ வழிபாட்டைக் கைவிட தானியேல் மறுத்ததால் மன்னர்களின் பல இன்னல்களுக்கு அவர் ஆளாகவேண்டி ஏற்பட்டது. எனினும், தானியேல் தைரியமிழக்காது தமது தெய்வத்தையே நம்பினார். அத் தெய்வமே அவரைக் காத்தருளிற்று. தானியேலின் உயர் ஞானமும், அஞ்சா நெஞ்சமும், அதிசயிக்கத்தக்க ஞானதிருஷ்டியும், ஆழ்ந்த கடவுள் பக்தியுமே இறுமாப்புக் கொண்டிருந்த பாபிலோன் அரசர்களை இறுதியில் பணியச்செய்தன. நம் நாட்டுச் சிறுவர்கள் தானியேல் காட்டிய நன்னெறியில் ஒழுகி நலம்பெறவேண்டுமென்பதே ஆசிரியரின் அவா.

விலை அணா 4. (சுதேசமித்திரன்)